பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸ்ரீ வைகாசி 05 மீ ஞாயிற்றுக்கிழமை [19—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 166

# அரசாங்கத்துக்கு எதிராக

# மீண்டும் அரசியல் கூட்டணி!

## எதிர்க் கட்சிகள் பெரும் முஸ்தீபு

கொழும்பு, மே 19

உள்ளூராட்சித் தேர்தலில் விழுந்த பலத்த அடியைத் தொடர்ந்து, தென்னிலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள், ஆளும் கட்சிக்கு எதிரான அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு பெரும் எடுப்பில் முஸ்தீபு நடத்தி வருகின்றன.

இடதுசாரி சோசலிஷச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் இது விடயத்தில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சியான ஐ. தே. க அமோக வெற்றி பெற்றது; ஏனைய எதிர்க் கட்சிகள் யாவும் பெரும் தோல்வி அடைய வேண்டியதாயிற்று.

பிரஸ்தாப தேர்தலுக்கு முன்னர் கூட்டணி ஒன்றை அமைக்க எதிர்க்கட்சிகள் முயன்றன. ஆனால் அது கைகூடவில்லை. அதனாலேயே ஐ. தே. க. பெரு வெற்றி அடையச் சந்தர்ப்பம் ஏற்பட்டதாக எதிர்க் கட்சிகள் இப்போது உணருகின்றன.

திடீர் பொதுத் தேர்தல் நடக்கலாம் என்ற பின்னணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மருந்து எடுத்து வர அனுமதி

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் போதிய அளவு மருந்துகள் கிடைக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து அனுமதி வழங்கப்பட்ட ஆங்கில மருந்து வகைகளைக்கொண்டு வருவதற்கு மேலும் இரு விநியோகஸ்தர்களுக்கு அரச அனுமதி வழங்கியுள்ளது.

இப்போது ஒரேயொரு விநியோகஸ்தர் மட்டுமே கொழும்பிலிருந்து மருந்து வகைகளை மொத்தமாகக் கொள்வனவு செய்து இங்குள்ள மருந்தகங்களுக்கு விநியோகித்து வருகிறார்.

மேலும் இரண்டு பேருக்கு அனுமதி கிடைத்துள்ளதால் கொழும்பிலிருந்து மருந்து வகைகள் அதிகமாக வந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

மட்டக்களப்பில் வெள்ளியன்று

## பொலிஸ் முகாம் அருகில் வீட்டில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, மே 19

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுடன் நடந்த மோதல் ஒன்றில் 4 படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பொலிஸ் முகாம் அருகில் உள்ள வீடு ஒன்றில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு குண்டு ஒன்று வெடித்ததில், அந்த வீட்டில் இருந்த மூன்று பேர் காயமடைந்தவர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-ஏ]

## அம்பாறை - சாகாமத்தில் இருவர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், மே 19

அம்பாறை மாவட்டம், சாகாமத்தில் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இராணுவத்தினர் 9 தமிழ் மக்களைக் கைது செய்தனர்.

அவர்களில் இருவர் பின்னர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏனைய எழுவரது நிலை குறித்து தகவலில்லை. அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

[ஓ]

## தமிழீழம் அமைப்பதற்கு பாட்டாளி கட்சி ஆதரவு

லண்டன், மே 18

இலங்கையில் தமிழீழம் அமைப்பதற்கு, தமிழ்நாடு பாட்டாளி மக்கள் கட்சி தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அந்தக் கட்சி ஆதரித்து நிற்கிறது.

கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க, தி. மு. க. ஆகிய இரு கட்சிகளுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி களத்தில் சவாலாக உள்ளதாகவும்— தமிழ் நாட்டில் 206 இடங்களில் போட்டியிடுவதாகவும், வன்னியர் அதிகமாக வசிக்கும் இடங்களில் இக்கட்சி பெரும் வெற்றியீட்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[ஓ-ஏ]

## இந்தியத் தேர்தல்: நாளை வாக்களிப்பு ஆரம்பம்

புதுடில்லி, மே 19

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலின் முதற் கட்ட வாக்களிப்பு நாளை [திங்கள்] 204 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

9 மாநிலங்களிலும் 4 யூனியன் பிரதேசங்களிலும் இத் தொகுதிகள் உள்ளன.

திங்கள் நடைபெறும் தேர்தலில் 19 கோடி மக்கள் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

பிரதமர் சந்திரசேகர், முன்னாள் பிரதமர்கள் ராஜீவ் காந்தி, வி. பி. சிங், துணைப் பிரதமர் தேவிலால் ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளிலும் நாளை திங்கள் வாக்குப் பதிவு இடம்பெறும்.

இத் தொகுதிகளுக்கான தேர்தல் பிரசாரங்கள் யாவும் நேற்று மாலையுடன் முடிவடைந்துவிட்டன. [ஓ-ஏ]

[மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்]

## முச்சந்தி முரளி



தேர்தலில மண் கவ்வின பிறகுதான், உவையளுக்கு ஞானம் பிறக்குது போல...!

## முத்திரை சந்தையில் சனக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 19

நீண்ட நாட்களின் பின்னர் நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதி நேற்று மாலை பல நூற்றுக்கணக்கான கொழும்பு பயணிகளால் நிறைந்து வழிந்தது.

இரண்டு பஸ்களும், பத்துக்கும் மேற்பட்ட மினி வான்களும் மற்றும் ஆட்டோக்களும் பயணிகளை ஏற்றிக்கொண்டு கேரதீவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றன.

[ஓ-ஏ]

## தமிழ்மகன் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மே 19

மட்டக்களப்பு மாவட்டம், வாகரை இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை மாலை 5-30 மணியளவில் வெள்ளையடிமடுவில் அப்பாவி தமிழ் மகன் ஒருவரைக் கைது செய்து, பின்னர் வெட்டிக்கொலை செய்தனர்.

இவருடைய ... பிள்ளை ... [...] ... [ஓ]

மட்டு. மாவட்டத்தில்

## தமிழ் அகதிகளின் வீடுகள் உடைத்துச் சூறையாடல்!

யாழ்ப்பாணம், மே 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கிராமங்களில் இருந்த மக்கள் வெளியேறிய வீடுகள் உடைக்கப்பட்டு, அங்குள்ள பொருள்கள் மற்றும் தளபாடங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

எல்லைப்புறக் கிராமங்களான இன்னலவத்தை 34 35 37, 38 ஆம் ஆகிய கிராமங்களில், கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகள், அனைத்தும் உடைக்கப்பட்டு, ஓடு, மரம், கதவு நிலைகள் போன்ற கட்டடப் பொருள்கள் யாவும் வாகனங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாப் பகுதியில் அறுவடை கைவிடப்பட்டது

கிளிநொச்சி, மே 19

வவுனியாப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட நெல் கடந்த இரண்டு வாரங்களாக இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளால் அறுவடை செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

கால போக நெல், கால்நடைகளுக்கு உணவாகிய தால் நெல் அறுவடை முற்றாகவே கைவிடப்பட்டுள்ளது!

கோமரசங்குளம், பாலமோட்டை, கோந்தக்காரன் குளம், ஓமந்தை விளக்கு வைத்த குளம், இறம்பைக் குளம், பரநாட்டகல், நொச்சி மோட்டை உட்பட பல பகுதிகளிலும் மிகப் பிந்தி நெல் விதைக்கப்பட்டதால் இந்த மாதமே அறுவடை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கு தமிழ் கிராமத்தில் எழுவர் சுடப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம், மே 19

மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சை, வவுணதீவு பகுதிகளை அண்டிய காளை போட்டமடு பகுதியில் நேற்று ஏழு அப்பாவித் தமிழ் மக்கள் ஸ்ரீலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இன்னும் இருவர் தாக்குதலில் காயமடைந்தனர்.

அப்பகுதியிலுள்ள தமிழர்களின் ஏழு வீடுகளும் படையினரால் தீவைத்து எரிக்கப்பட்டன.

[ஓ]

## கிழக்கு கரையோரத்தில் பெரும் ராணுவ நடவடிக்கை

கிழக்கு மாகாணக் கரையோரப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.


நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து நான்கு நாட்கள் வரை இடம்பெறும் என்றும்—

தற்சமயம் கரையோரப் பகுதியில் பாரிய தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

தோற்றம்: 5-3-1916

மறைவு: 20-4-1991

எங்கள் குடும்பத்தில் ஒளி விளக்காய் இருந்து எங்கள் துயரத்தை எல்லாம் தீர்த்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத் துயில் கொள்ளச் சென்றதேனோ. 20 5-1991 இல் நடைபெறும். வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்,

369/1 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[16849]

## வேலணை ஆசிரியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், மே 19

வேலணைக் கோட்ட ஆசிரியர்களின் மே மாத சம்பளக் கொடுப்பனவுக்கான பதிவேடு, சம்பளக் காசோலை ஆகியவற்றை நாளை (திங்கள்) காலை 9 மணிக்கு வேலணைக் கோட்டத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. புலேந்திரன் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். [ஒ]

## இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம், மே 19

மருதனார்மடம் பகுதி தோட்ட வெளியில் கிடந்த இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்து கிடந்தவர் உடுவிலைச் சேர்ந்த சின்னத்துரை சிவனேசநாதன் (32 வயது) என்பவர் என்றும்— கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே இவர் திருமணம் செய்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [ஒ-15 143]

## அச்சுவேலி ஆஸ்பத்திரி வழமை நிலையில்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மீண்டும் வழமையான வைத்திய சேவைகள் நடைபெறுகின்றன.

நோயாளர்கள் வார்டுகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களின் வசதி கருதி 24 மணி நேரமும் வைத்திய உதவிகள் வழங்கப்படுகின்றன. [இ-11]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்: 19 | 08 | 1962



வீர மரணம்: 19 | 04 | 1991

### லெப். கேர்ணல் கிரேசி
(கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளை)

விண்தொட நிமிர்ந்த மேனி
வீரனாய் எழுந்த வேங்கை
கண்களில் நிலைத்த கோலம்
கணத்தினில் விழுந்த தாமோ?
மண்ணினுக் காக வாழ்ந்த
மாபெரும் வீரா! உன்னை
எண்ணியே எழுவோம்; நாளை
எதிரிகள் வீழ்வார் வாழ்வாய்

உன் நினைவுடன் வாழும்
- நண்பர்கள்.

[16852]


# ★ பாரதிதாசன் ★
## கல்வி நிறுவனம்
(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ECONOMICS

S. வரதராஜன் B. A. (Hons)

A/L 91

பிரிவு I:

சனி 8 00 பணமும் வங்கியும்
ஞாயிறு 8 00 வரவு செலவுத்திட்டம்
சனி, ஞாயிறு 12 00 இலங்கைப் பொருளாதாரம்

பிரிவு II:

சனி
ஞாயிறு 9-00 வரவு செலவுத்திட்டம்
சனி
ஞாயிறு 12-00 இலங்கைப் பொருளாதாரம்

மீட்டல் வினா - விடை வகுப்பு

பிரிவு I: சனி, ஞாயிறு 1-00 — 2-00

பிரிவு II: செவ், வியாழன் 1-30 — 3-30

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்கு வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. அனைத்துப் பிரிவுகளுக்கும் ஒரே கட்டணமாகிய 25/- மட்டுமே அறவிடப்படும்.

[சி 0006]

மாதாந்த பயிற்சிப் பரீட்சை

★ இலவச கருத்தரங்கு ★

GET SET TEST - II

நேர அட்டவணை

A/L 91 பரீட்சை 24 - 05 - 1991

| 24 - 05 - 1991 பரீட்சை | | 27 - 05 - 1991 கருத்தரங்கு |
|---|---|---|
| 1-00 — Chemistry (Organic) | - I | 1-00 — Chemistry |
| 3-00 — Physics- | - I | 2 00 — Physics |
| 4-00 — Pure Maths | - I | 3-00 — Zoology |
| Zoology | - I | 3 00 — Pure Maths |
| 5-00 — Botany | - I | 4 00 — Botany |
| Applied Maths | - I | 4-00 — App. Maths |

ஆண்டு-5 [புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை]

பரீட்சை 27 - 05 - 1991

| பரீட்சை | கருத்தரங்கு |
|---|---|
| 1-00 — தமிழ் | 4-00 — தமிழ் |
| 2-15 — கணிதம் | 5-00 — கணிதம் |

O/L Dec. 90 பரீட்சை 27 - 05 - 1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|---|
| 7-00 — வர்த்தகம் | - I | 1-45 — விஞ்ஞானம் |
| 8-00 — கணிதம் | - I | 2 30 — கணிதம் |
| 9-00 — விஞ்ஞானம் | - I | 3-15 — தமிழ் |
| 10-00 — தமிழ் | - I | 4-00 — சமூகக்கல்வி |
| 11 00 — சமூகக்கல்வி | - I | 4-45 — ஆங்கிலம் |
| 12 00 — ஆங்கிலம் | - I | 5-30 — வர்த்தகம் |

O/L Dec. 91 பரீட்சை 27 - 05 - 1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|---|
| 7-00 — வர்த்தகம் | - I | 1-45 — தமிழ் |
| 8 00 — கணிதம் | - I | 2-30 — சமூகக்கல்வி |
| 9-00 — விஞ்ஞானம் | - I | 3-15 — கணிதம் |
| 10-00 — தமிழ் | - I | 4 00 — விஞ்ஞானம் |
| 11-00 — சமூகக்கல்வி | - I | 4-45 — வர்த்தகம் |
| 12 00 — ஆங்கிலம் | - I | 5-30 — ஆங்கிலம் |

★ ஆசனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்து சுட்டெண்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

பரீட்சைப் பகுதி

BOND கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4084]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்எண்ணை கொண்டுவர படையினர் அனுமதி

## ஆனால் "பரல்" பிரச்சினை உண்டு

யாழ்ப்பணம், மே 19

அனுராதபுரத்தில் இருந்து வடக்கே மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு, கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளது.

கொழும்பு சென்று மண்ணெண்ணெய் எடுத்து வருவதில் உள்ள தடங்கல் குறித்து வடபகுதி அரச அதிபர்கள் கொழும்பில் நடந்த அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் வலியுறுத்தினர். அங்கு வைத்தே இந்த சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இப்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறையால் இங்கிருந்து வெற்று "பரல்"களை எடுத்துச் செல்ல முடியாதுள்ளதாகவும், கொழும்பில் "பரலின்" விலை உயர்ந்துள்ளதால் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாகவும் அரச அதிபர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக ஒரு முடிவு எடுத்து அடுத்த கூட்டத்தில் முடிவு தெரிவிப்பதாக கூட்டுப்படை அதிகாரிகள் உறுதி அளித்தனர். [இ-3]


## உடன் தேவை

புதிதாக அல்லது சிறிது காலம் பாவித்த அல்கதின் பைப் உடன் தேவை

வைத்திருப்பவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

ஷப்றா,
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## முக்கிய அறிவித்தல்

க. மு. ஸ்ரீமார்க் மண்டான் பெயரில்

போலிச் சுருட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாக அறியவந்துள்ளோம் போலி க. மு ஸ்ரீமார்க் மண்டான் சுருட்டுக்கள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

அசல் க. மு. ஸ்ரீமார்க் சுருட்டுக்கள் எமது ஸ்தாபனம் மண்டான் கொலனி

என்னும் இடத்திலிருந்து துவிச்சக்கர வண்டி மூலமே விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் விற்பனையாகும் போலி க. மு ஸ்ரீமார்க் சுருட்டுக்களை வாங்கி ஏமாறாதீர்கள். போலி க.மு. ஸ்ரீமார்க் சுருட்டு விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

க.மு. ஸ்ரீமார்க் நிர்வாகம்,
மண்டான் கொலனி, கரணவாய்

(மோசடி செய்யும் உற்பத்தியாளரைக் கண்டு பிடித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்)

[16845]



அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் ஆரம்பிக்கும்

AL 91 மாணவர்களுக்கான 2½ மாத பிரத்தியேக

## துரித மீட்டல் வகுப்புகள்

(நீண்டகால அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை)

ஆரம்பம்: 25-05-1991 காலை 9 மணி

- ★ பொருளியல் ... திரு. லோகநாதன்
- ★ கணக்கியல் ... திரு. மரியதாஸ்
- ★ வர்த்தகம் ... பிரபல ஆசிரியர்
- ★ அளவையியல் ... திரு. யுகபாலசிங்கம்
- ★ தமிழ்/ இந்துநாகரிகம் ... பிரபல ஆசிரியர்
- ★ அரசியல் ... திரு. சீலன்
- ★ புவியியல் ... திரு. சண்

★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்.
★ அச்சடித்த வினா-விடைப் பயிற்சிகள்.

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற ஓர் அரிய வாய்ப்பு!

விவரங்களுக்கு: நேரில்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி-0002]


# பசளை விற்ற பணம் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வசதி!

யாழ்ப்பாணம், மே 19

கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட பசளை வகைகளை விற்பதன் மூலம் பெறப்படும் பணம் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்படும்.

இதற்கான அனுமதி இடைத்துள்ளது.

புனர்வாழ்வு அமைச்சால் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பசளை வகைகள் கிளிநொச்சி செயலகத்துக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்தப் பசளை வகைகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் பணத்தை மீளவும் விவசாயிகளுக்குக் கடனாக வழங்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபராக இருந்த திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [இ-3]

## கிளிநொச்சிக்கு மருந்து!

யாழ்ப்பாணம், மே 19

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைகளுக்குத் தேவையான மருந்துவகைகள் அனுப்பப்பட இருக்கின்றன.

சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். [இ-3]

## மட்டுவிலில் தையற் கண்காட்சி

சாவகச்சேரி, மே 19

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் மட்டுவில் தெற்கில் நடத்தப்பட்ட தையற் பயிற்சியின் கண்காட்சியும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் சோமாஸ் கந்த சனசமூக நிலைய மண்டபத்தில் உதவி இளைஞர் சேவை அதிகாரி செல்வி சுகுணா சின்னத்துரை தலைமையில் நடைபெற்றன.

உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்து பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. ஏ. கார்த்தி, டிஸ்கோ முகாமையாளர் திரு நாகேந்திரம், டாக்டர். பே. பிலிப், இ. சே. திரு துரைசிங்கம், திரு. பேரின்பநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். [இ - 31]

## ப. நோ. கூ. ச: மேலும் 2 கிளைகள்

இடம் பெயர்ந்தவர்கள் வசதி கருதி புதுக்குடியிருப்பு ப. நோ, கூட்டுறவுச் சங்கம், மேலும் இரண்டு கிளைகளைத் திறந்துள்ளது.

உடையார்கட்டு. புதுக்குடியிருப்புச்சந்தி ஆகிய இடங்களிலேயே கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [இ-126]

## திறந்த பல்கலைக்கழக பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 19

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்- பிராந்திய நிலையத்தில் சட்ட மாணி, விஞ்ஞான மாணி, தொழில்நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த கற்கை நெறிகளில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு 90/91 ஆம் ஆண்டுக்கான மீள் பதிவுகள் - சட்டமாணி நெறிக்கு எதிர்வரும் 29 ஆம் திகதியும் விஞ்ஞான மாணி நெறிக்கு ஜூன் முதலாம் திகதியும், தொழில்நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஜூன் இரண்டாம் திகதியும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. [இ 3]

## புதுக்குடியிருப்பில் தண்ணீர்க் கஷ்டம்

புதுக்குடியிருப்பு மே 19

புதுக்குடியிருப்பில் உள்ள இரணைப்பாலை, ஆனந்தபுரம் கிராம மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இன்றி கஷ்டம் அடைகின்றனர்.

நல்ல தண்ணீருக்காக பல மைல் தூரம் நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. [இ-126]

## நிதிக் கம்பனிகள் சட்டத் திருத்தம்

கொழும்பு, மே 19

நிதிக் கம்பனிகள் சட்டத் திருத்தம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

விவாதத்தை வெளிவிவகார அமைச்சரும், துணை நிதி அமைச்சருமான ஹமீது ஹெரத் முடித்து வைத்துப் பேசினார்.

வங்குரோத்து நிலையை அடைந்த நிதிக் கம்பெனிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அப்படியான நிதிக் கம்பெனி இயக்குனர்கள் இவர் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

நிதிக் கம்பெனிகளில் பணம் வைப்புச் செய்துள்ளவர்களுக்கென்று காப்புறுதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட [illegible] டார். [இ-எ]


### யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
சங்கானை.

இப்பாடசாலையில் க பொ. த. (உயர் தர) கலைப் பிரிவுக்கான வகுப்பு ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 21 - 05 - 91

அனுமதிப் பரீட்சை: 22 - 05 - 91, 23 - 05 - 91 காலை 9 00 மணி முதல்

புதிய வகுப்பு ஆரம்பம்: 03 06 91 திங்கட் கிழமை

அதிபர்.

17 - 05 91 [4082]



## ★ பாரதிதாசன் ★

கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

DAY CLASS A/L 91

### ECONOMICS- S. வரதராஜன்

| நாட்கள் | நேரம் | பாடம் |
|---|---|---|
| திங்கள், செவ்வாய் | 8 00 | இலங்கைப் பொருளாதாரம் |
| புதன், வியாழன், வெள்ளி | 8 00 | சென்மதி நிலுவை |
| செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி | 12 00 | மீட்டல் வினா விடை |

### ACCOUNTS சௌந்தி

| நாட்கள் | நேரம் | பாடம் |
|---|---|---|
| செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி | 1 00 | கம்பனி |
| திங்கள் | 12 00 | பங்குடைமை |
| செவ்வாய், புதன், வியாழன் | 10 00 | பங்குடைமை |
| திங்கள் | 1 00 | தொங்கல் க/கு |
| செவ்வாய், புதன், வியாழன் | 11-00 | தொங்கல் க/கு |

குறிப்பு:- மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகள் அனைத்துக்கும் ஒரே கட்டணமாகிய 30/- மட்டுமே அறவிடப்படும்.

[இ 0003]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய பழைய இனிமாய்ட்ட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு; தொடர்பு: ஜெனவி றேடர்ஸ், கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [4075]

### எரு விற்பனை

எரு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் சங்க வளவில் எருவைப் பார்வையிட்டு கூறுவிலையை 1991-05-24 ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5069]

### மணப்பெண்கள் தேவை

லண்டன், கனடா, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன் நாடுகளில் தொழில் புரிவோருக்கும், அவ்விடத்திற்குடியுரிமை பெற்றோருக்கும் மணப்பெண்கள் தேவை. ஞ. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை பிற்பகல் 2.00 மணிக்கு பின் சந்திக்கலாம். [16848]

### மணமகள் தேவை

யாழ் இந்து 31 வயது, உதயச் செவ்வாய் உள்ள B Sc இலங்கைப் பட்டதாரி தற்போது Swiss இல் பிரஜா உரிமையும், நிரந்தரத் தொழிலுமுள்ள மணமகனுக்கு நன்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. [பட்டதாரிகள் விரும்பத்தக்கது] சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல 312, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16812]

யாழ் இந்து பெற்றோர் லண்டனில் Accountant ஆக தொழில் பார்க்கும் 33 வயது மகனுக்கு படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர் மணமகள் லண்டன், அவுஸ்திரேலியாவில் இருப்பின் விரும்பத்தக்கது. இல 806 C/O உதயன், [4079]

### கல்வி

G. C. E, [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு விசேஷ சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிப்பதில் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேஷ சித்திக்கு 20 மணித்தியாலத்திருந்து 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [4081]

### வகுப்புகள்

Cake Icing, Sugar Craft, General Cookery பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy 71, Nayanmar Road, Nallur, Jaffna. [சி/5872]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு, மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள் 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி காலை 9.00 மணி தொடக்கம் 3-30 மணி வரை சந்திக்கலாம்; கிழமை விடுமுறை. [16722]

### PERSONAL CLASSES
### [கணிதம்]

G. C E. [O/L] 90, 91, மற்றும், ஆண்டுகள் 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சித்திக்கு உத்தரவாதம், விபரங்களுக்கு கந்தையா பரராஜசேகரன், 8B, Flechers Lane, Chundikuli. [16842]

### அறிவகம்

பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் ஏனைய உபகரணங்கள், பேப்பர் வகைகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கருகில்] [சி-4947]

### தவறிவிட்டது

பல்கலைக்கழக சான்றிதழ் சங்குப்பிட்டிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி இலங்கை வங்கியிலோ, உதயன் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16728]

### வாடகைக்கு

புங்கன்குளம் வீதியில் சிறிய குடும்பத்துக்கு ஏற்ற அறை வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு இல-318 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16847]

### அம்பாள் திருமண சேவை

Engineers, Lecturers, Accountants ஆகியோருக்கு பட்டதாரி மணப்பெண்கள் தேவை. இன்னச்ச மிக் குருக்கள், சண்முகராஜா, வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [16730]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில்
25 - 04 - 1914

ஆண்டவன் அடியில்:
19 - 04 - 1991

### அமரர் கதிரவேலு சோமசுந்தரம்

(Retired Administrative Secretary, Teaching Hospital, Jaffna)

உண்மையான உங்கள் சேவையால் ஊராரால் உத்தமனாக மதிக்கப்பட்டீர்கள். கண்டிப்பான உங்கள் பணிபால் பலராலும் போற்றப் பட்டீர்கள். எம்மை நல்வழிகாட்டி, நல் வாழ்வு வாழ வழியமைத்து தந்த எங்கள் அன்புக் குலவிளக்கே! உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும் உங்கள்

அன்பு மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டுக்கோட்டை [16840]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 09 — 05 — 1941

இறைவன் அடியில்: 19 — 04 — 1991

### திருமதி நடராஜா கணேஸ்வரி
[மணி]

அழகின் திருவுருவாய்,
குலத்தின் ஒளிவிளக்காய்,
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
இறைவன் திருப்பணியின் முன்னோடியாய்
வாழ்க்கையின் பிற்பகுதியை அர்ப்பணித்து
இறைவன் திருப்பாதம் சென்றடைந்தாய்
அம்மா நீ!
நாமோ உமது பிரிவு தாங்காமல் தவிக்கின்றோம்.

ஆருயிர்க் கணவன், அன்பு மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உடன் பிறந்தோர், சுற்றத்தார்.

வட்டுக்கிளி,
இணுவில் மேற்கு. [16846]

# VACANCY

Applications are invited from suitable candidates for the post of Community Development Trainer. This training programme for about six selected trainees includes the following areas: The medium of instruction will be in Tamil.

(a) Dairy Development
(b) Milk food preparation
(c) Soil testing
(d) Co-operative management
(e) Manure and Fertilizer Storage
(f) Seedling preparations
(g) Community animation, basic skills in community health and Community Development

The above programme is for six (6) months. The candidates must have experience and relevant qualifications in the above fields. He should be able to reside at the training site for the six months (Quarters will be provided).

Very attractive salary will be paid according to qualifications and experience. Not less than Rs. 20,000/- per month. Apply before 31st of May 1991, to.

**The Director of Projects,**
**Jaffna Diocese of the Church of South India.**
DIOCESAN OFFICE,
VADDUKKODDAI.

[C-5070]

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி





| செல்வன் நடராசா குணவதன் | திருமதி ஆறுமுகம் நல்லம்மா |
|---|---|
| எம் வாழ்வின் மகிழ்வுக்கு: 20 - 06 - 1973 | அன்னை மடியில்: 26 - 12 - 1904 |
| எம் வாழ்வின் துயருக்கு: 01 - 05 - 1986 | ஆண்டவன் அடியில்: 19 - 05 - 1986 |
| திதி: 07 - 05 - 1991 | திதி: 24 - 05 - 1991 |

எம் இதயக்கோவிலுக்கு ஆண்டுகள் ஐந்தோ!
தம்பி!
பால் வடியும் குழந்தையாக உன்னைக் கண்டோம் ஆனால், கட்டிளங் குழந்தையாக, நாம் உன்னைப் பற்றி கட்டிய கற்பனைகள் நிஜமாக, உன்னை கண்குளிரக் காணாத பாவிகளானோம்!
உன் வளம் பெற்று, நாம் மகிழும் நாளிலே, தினம் துயர் பெற்று வாடுகின்றோமே!
தம்பி!
உன் பரீட்சை நெருங்குதே, அதை நினைக்கவே மனம் பதறுதே!
உன்னை கண்குளிர நாம் கண்டு, தம்பி! தம்பி! ...... என்றிட, என்று நீ வருவாயோ!
அம்மம்ம !

பாசம் என்னும் வலையால் கட்டுண்டோம், மூவராக உலா வந்தோம், தம்பியை பிரிந்து வாழும் நிலை எமக்கேற்பட்டது ஏன்? சோகத்தால் துடிக்கின்றோம், விடுபட உன் அருள் வேண்டுகின்றோம், வாழ்வில் மகிழ்வேற்பட அருள் செய் தாயே!

எம் ஒளி விளக்குகளாம் உங்களை
என்றும் நினைந்துருகும்;

| | |
|---|---|
| அப்பா, அம்மா, | மருமகன், மகள், |
| அக்காமார், உறவினர்கள், | பேரப்பிள்ளைகள், |
| நண்பர்கள், | பூட்டப்பிள்ளைகள், |
| ஆசிரியர்கள். | உறவினர்கள். |

Dr. V. S. நடராசா,
சண்டிலிப்பாய் [4077]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தாழ் திறப்பதால் பயன் கிடைக்குமா?

சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கை வருவதற்குக் கொழும்பு அரசு பச்சைக் கொடி காட்டியிருக்கிறது.

பதினாறு வருடங்களின் முன்னர் 1975 ஆம் ஆண்டில் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டது. அதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர், 1974 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படத் தொடங்கிய வருடம். அதன் பின்னரும் சர்வதேச மன்னிப்புச்சபை நாட்டில் கால் பதித்தால், தமிழர்களுக்கு இழைக்கப்படும் இம்சைகள், இன்னல்களை, அதனையும் மெய்யுமாகக் கண்டு வெளி உலகத்துக்கு அம்பலப்படுத்திவிடும் என்ற அச்சம் அப்போதே இலங்கை அரசுக்கு ஏற்பட்டு விட்டது.

பொலீஸ் நிலையங்களில், இராணுவத் தடுப்பு முகாம்களில், சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்கள் மீது கொடூரச் சித்திரவதைகளாகத் தொடங்கிய மனித உரிமை மீறல்கள், 16 வருடகால இடைவெளியிலும், படுகொலைகள், மர்மக்கொலைகள், காணாமற்போவோர், விமானக்குண்டு வீச்சினால் அழித்தல் என்ற பல்வேறு பரிமாணங்களை அடைந்து இன அழிப்பு என்ற உச்சக் கட்டத்துக்கு வந்து விட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபை, இங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக் காட்டிய போதெல்லாம், இலங்கை அரசுகளும், அவற்றின் அமைச்சர்களும் மறுத்துரைத்து வந்தனர்; சபை மீது வசை பாடினர். லக்ஷ்மன் ஜெயக்கொடி என்றும், லலித் என்றும், ரஞ்சன் என்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்களும், மற்றும் வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்களும் சபை மீது சீறிப் பாய்ந்தார்கள்; சினந்தார்கள்; முகத்தில் கரிபூசினார்கள்.

உண்மைகள் உறங்குவதில்லை. அதனை இப்போது உணர்ந்து கொண்டதால் தான், அரசு மன்னிப்புச் சபைக் குழு அடுத்த மாதம் இங்கு வர அனுமதித்திருக்கிறது என நினைத்து விடலாகாது.

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு, ஐரோப்பிய சமூக நாடுகள் மற்றும் பல உலக அமைப்புகள், கொழும்பு அரசுக்கு கடன் வழங்குவதானால் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று கோடிட்ட காரணத்தாலேயே மன்னிப்புச் சபைக்கு 16 வருட இடைவெளியின் பின்னர் தாழ் திறக்கப்படுகிறது. அது கூட தூதுக்குழுவினர் வந்துபோன பின்னர் தான் நம்பிக்கைக்கு உரியது.

மன்னிப்புச் சபைக் குழு இங்கு வந்தால் இதுவரை நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றிய சம்பவங்கள் குறித்து நேரில் விவரம் திரட்டியும், விசாரித்தும் பூரணமான முதற் தரவுகளைப் (Complete First Hand Informations) பெற வேண்டும். உலக வங்கி அதிகாரிகள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைப் பார்த்த கதையாகி விடாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், அது இங்கு வருவதால் உரிய பயன் கிடைக்கப் போவதில்லை. உண்மை நிலை தெரியப் போவதும் இல்லை.

# பூரண விடுதலை அடைவதற்கு பண்டைய வாழ்க்கை முறை தேவை

## சித்த மருத்துவபீட வைபவத்தில் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், மே 19

ஒரு தேசிய இனம் தன் தைத்தானே தௌரவிக்கவும், மதிக்கவும் தனது பண்டைய வாழ்க்கை முறைகளை ஆதரிக்கவும், கடைப்பிடிக்கவும் எப்போது தலைப்படுகின்றதோ அப்போதுதான் அது பூரண விடுதலையை அடைந்த ஒரு சமூகமாகக் கருதப்படும்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ இயற்கை உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் மேற்கண்டவாறு கூறினார்.

கைதடி சித்த மருத்துவ அரங்கில் நேற்று முன்தினம் காலை இந்த வைபவம் நடைபெற்றது.

திரு. பாலகுமாரன் மேலும் பேசுகையில்;

இந்த நிலையை நோக்கி இன்று தமிழ்ச்சமூகம் சென்று கொண்டிருப்பதை இன்றைய நிகழ்ச்சி எமக்கு உணர்த்துகிறது.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் முதலாவது படியாக இந்த நிகழ்ச்சியை நம் நினைவு கூருவோம் — என்றார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பேசுகையில் கூறியதாவது;

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் காலத்தில்மேலைத் தேச வைத்தியத்துறையில் பட்டம் பெற்ற சுமார் 80 வைத்தியர்கள் இன்றுவடக்கு-கிழக்கில் சேவையாற்றுவதற்கு இல்லை.

ஆனால் இங்கு சித்த வைத்தியத் துறை மாணவர்களும், வைத்தியர்களும் தமிழ் மக்களுக்கு சேவை செய்ய ஒன்று கூடி நிற்பது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

அண்மையில் மடு அகதி முகாமில் சேவை புரியவென யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 40 மாணவர்கள் அடங்கிய குழுவினர் சென்றிருந்தனர்.

கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களே அங்கு சென்றிருந்தனர். ஆனால் அவர்களுடன் அங்கு சென்று மருத்துவ உதவிகளைச் செய்ய இரண்டு மருத்துவ மாணவர்களைப் பிடிக்க முடியவில்லை. இந்நிலை வருந்தத்தக்கது. மாணவர்களது மனநிலையில் மாற்றம் வர வேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தில் பயிற்றப்பட்ட மருத்துவர்கள் இன்று இங்கு சேவையாற்ற இல்லை.

இன்றைய இந்த நிலையில் எமது மூலவளங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய சித்தமாயுள்ள சித்த மருத்துவ மாணவர்களையும், வைத்தியர்களையும் நாம் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

இப்படி அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக் கழக கலை பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட நிர்வாக உதவி அரசியல் பொறுப்பாளர் திரு பாப்பா, திருமதி கைலாசபதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. டிவகலாலா, யாழ். மாநகர ஆணையாளர் பி. பாலசிங்கம் சிரேஷ்ட மருத்துவர் க. கனகராசா உட்படப் பலர் ஆசியுரை வழங்கினர்.

சித்தமருத்துவ வைத்தியக் கலாநிதிகளும், பேராசிரியர்கள், மற்றும் மாணவர்களும் சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சித்த மருத்துவ உற்பத்திப் பொருள்களின் தன்மை பற்றி டாக்டர் இ. சண்முகராஜா உரையாற்றினார்.

சித்த மருத்துவ உற்பத்திப் பொருள்களை துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அறிமுகம் செய்து வைத்தார். [இ 5]

### நெட்பானா உதவி

புதுக்குடியிருப்பு, மே 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி பயின்று வரும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான பாடசாலை சீருடைகளை நெட்பானா நிறுவனம் வழங்கிவருகின்றது. [இ-126]

### கூட்டுப்படை பிடிவாதம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்-மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை அம்புலன்ஸ் சேவைகளுக்கு டீசல் வழங்க கூட்டுப்படைத் தலைமையகம் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்துள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை இந்தத் தகவலை தெரிவித்தார்.

அம்புலன்ஸ் சேவைக்குத் தேவையான டீசலைப் பெற கூடுதல் தவரமும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் கூட்டுப்படை தலைமையகம் பிடிவாதமாக மறுத்துவிட்டது — என்றார் அவர். [இ-3]

### வாக்குகள் எண்ணும் வேலை 27இல் ஆரம்பம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணும் பணி இம்மாதம் 27 ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரதம தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை வாக்குப் பதிவின்போது பணி புரியும் 40 லட்சம் ஊழியர்களை 40 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்போவதாக பிரதம தேர்தல் ஆணையாளர் அறிவித்தார். [இ-எ]

### தொழிற் கட்சி வெற்றி

பிரிட்டனில் கடந்த வியாழன் நடந்த நாடாளுமன்ற இடைத்தேர்தல் ஒன்றில் தொழிற்கட்சி அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டியது.

இத்தொகுதி இதுவரை ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியிடம் இருந்துவந்தது.

### வெற்றி வாய்ப்பு

இந்திய தேர்தலில் எந்தக் கட்சி எவ்வளவு ஆசனங்களைக் கைப்பற்றும் என்பது பற்றி பிரபல வாரப் பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பின் விவரம் வருமாறு;

சண்டே:-

| | |
|---|---|
| இ. காங்கிரஸ் | — 310 |
| பாரதிய ஜனதா | — 85 |
| தேசிய முன்னணி | — 30 |

1984 தேர்தலில் வீசிய காங்கிரஸ் அலை இம்முறையும் வீசும் என்றும் 'சண்டே' ஆருடம் கூறியுள்ளது.

இந்தியா டுடே:-

| | |
|---|---|
| இ. காங்கிரஸ் | — 233 |
| பாரதிய ஜனதா | — 155 |
| தேசிய முன்னணி | — 105 |

புரொன்ட்லைன்:-

| | |
|---|---|
| இ. காங்கிரஸ் | — 224 |
| பாரதிய ஜனதா | — 140 |
| தேசிய முன்னணி | — 115 |

# இந்தியப் பொதுத் தேர்தல்; யார் பக்கம் அலை வீசுகிறது?

இந்தியாவின் பத்தாவது பொதுத் தேர்தல் நாளை ஆரம்பமாகிறது. அதனை முன்விட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

எஸ். எஸ். ஜீத்

கடந்த ஒன்றரை வருடங்களாக டில்லியில் நடந்தேறிய அரசியல் சித்துமுத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக மார்ச் மாதத்தில் பத்தாவது இந்தியப் பொதுத் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியானது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஆயுள் ஐந்திலிருந்து ஒன்றரை ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு இம்மாதம் 20, 23, 26 ஆம் திகதிகளில் பத்தாவது நாடாளுமன்றத்தின் தெரிவு நடைபெற இருக்கிறது. மொத்தம் 537 லோக சபைத் தொகுதிகளுக்கும் தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், கேரளம், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் 1100க்கு மேற்பட்ட சட்டசபைகளுக்குமே வாக்குப்பதிவு இத் திகதிகளில் நடக்கப்போகிறது.

முன்னைய தேர்தல் முடிந்து குறுகிய காலத்துக்குள் மறுபடியும் தேர்தல் வந்து விட்ட போதிலும் முன்னைய உற்சாகத்துக்கு சிறிதும் குறைவில்லை.

இந்த நிலையில் 1989 தேர்தலை சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

### 1989 டிசம்பர் தேர்தல்

ஈழத் தமிழர் விவகாரத்தில் கையாண்ட தவறான அணுகுமுறை போபர்ஸ் பீரங்கி பேர ஊழல், கட்சியின் மூத்த அரசியல் வாதிகளுடனான கசப்புணர்வுகள் போன்ற பல பிரதிகூலங்களின் மத்தியில் ராஜீவ் காந்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னரான இரண்டாவது பொது தேர்தலை 1989 இல் எதிர் கொண்டார்.

உண்மையில் 84 இல் நடைபெற்ற அவரது முதலாவது தேர்தலில் அவர் பெற்ற வெற்றி இந்திரா கொலையினது அனுதாப அலைகளை முதலாகக் கொண்டு சம்பாதிக்கப்பட்டதே.

எனவே இத் தேர்தலே ராஜீவ் சுயமாக முகம் கொடுத்த கன்னித் தேர்தல் ஆகும். தேசிய மட்டத்தில் ராஜீவுக்கு இணையாக அக் காலகட்டத்தில் தேசிய தலைவராக உருவெடுத்த வி. பி. சிங், இடதுசாரிகள் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைக்க முடியுமென ராஜீவ் கனவிலும் கருதியிருக்க முடியாது. ஆனால் இறுதியில் அதுவே நடந்தது.

காங்கிரஸ் தனிப் பெரும் கட்சியாக வெற்றி பெற்ற போதிலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற பிறகட்சிகளின் ஆதரவு இருக்கவில்லை. 1989 தேர்தலில் கட்சிகளின் நிலைவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | — 542 |
| தேர்தல் நடந்தது | — 530 |
| காங்கிரஸ் | — 194 |
| ஜனதாதளம் | — 141 |
| பி.ஜே.பி | — 86 |
| இடதுசாரிக் கூட்டணி | — 52 |
| [illegible] | — 11 |
| தெலுங்கு தேசம் | — 7 |
| சுயேச்சைகளும் பிறவும் | — 29 |

### 1991 மே தேர்தல்

இந்தத் தேர்தலில் களம் காணும் முக்கிய தேசியக் கட்சிகள் இந்திரா காங்கிரஸ் தேசிய முன்னணி, பாரதிய ஜனதா, சமாஜ்வாதி ஜனதா, இடதுசாரிக் கூட்டணி ஆகியவையே.

பிரதமர் பதவிக்கான நன்கு சாத்தியமான வேட்பாளர்களான ராஜீவ்காந்தி, வி. பி சிங், வாஜ்பாய், சந்திரசேகர் ஆகியோரில் வி பி சிங் ஒருவரே கண்ணியமான வேட்பாளராகத் தோற்றம் அளிக்கிறார்.

மேலும் மண்டல் குழு அறிக்கையின் அமுலாக்கம், பின்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு போன்ற அம்சங்கள் அடிமட்டத்து மக்களை நேரடியாகக் கவரும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

இதுதவிர ராமர் ஆலயப் பிரச்சினையில் மத நடுநிலைமையைக் காத்துக் கொள்ளப் புறப்பட்டதால்தான் பி ஜே. பி. இவரது ஆட்சிக்கு வேட்டு வைத்தது என்பதை முஸ்லிம்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் தேசிய முன்னணி போன்று அடித்தள மக்களை கவரக் கூடிய எதுவுமே அதனிடம் இல்லை.

எனினும் ஸ்திரமான ஆட்சியை வழங்குவது, ஒரே தலைவராக ராஜீவ்காந்தியை காண்பிப்பது என்பவற்றைத் துணையாகக் கொண்டு தேர்தல் களத்தில் குதித்திருக்கிறது.

### சந்திரசேகர் குழு

வி. பி சிங் கட்சி இரண்டாக, மூன்றாகப் பிளவுண்டது காங்கிரஸுக்கே லாபத்தைக் கொடுத்துள்ளது. வெறும் பதவி மோகத்துக்கு அடிமைப்பட்டு சந்திரசேகர் குழு வி பி சிங் தலைமையைப் புறக்கணித்தது.

தேசிய அளவில் அந்தக் கட்சிக்கு செல்வாக்கு என்று சொல்லக்கூடியதாக எதுவுமே இல்லை.

கட்சியில் நம்பிக்கை இழந்து விட்ட அமைச்சர்கள் வி. சி. சுக்லா, திருமதி உஷாஸிங், பாகேகோவர்த்தன் போன்றோர் காங்கிரஸுக்குத் தாவி தேர்தலில் போட்டியிட டிக்கெட் பெற்றுவிட்டனர்.

ஆகவே தமது ஆறுமாத ஆட்சியை மட்டும் துருப்புச் சீட்டாகக் கொண்டு கட்சி உறுப்பினர்களின் அவநம்பிக்கையின் மத்தியில் சந்திரசேகரும் தேர்தல் அரங்கில் பிரவேசித்திருக்கிறார்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவமணி குமாரசாமி (இச்சி)

அளவெட்டி செட்டிச்சோலையைச் சேர்ந்த இ. போ. சபை முன்னாள் காப்பாளர் திரு கா. குமாரசாமியின் மனைவி திருமதி நவமணி குமாரசாமி [இச்சி] 17-5-91இல் காலமாகி விட்டார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : கா. குமாரசாமி

அளவெட்டி. [16738]

## டானியேல் சுதர்சன் சாமுவேல்

தெல்லிப்பளையைச் சேர்ந்த ராஜ், புனிதம் சாமுவேலின் அருமைப் புதல்வன் டானியேல் 14-5-91இல் வட்டுக்கோட்டையில் அகால மரணமானார். இவர் மைக்கேல், இறிசாந்தினின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு. E. V. பொன்னுத்துரை, திருமதி பொன்னுத்துரை, காலஞ்சென்ற திரு திருமதி L. F. M. சாமுவேலின் பேரனுமாவார். இவரின் சேம ஆராதனை 15-5-91 அன்று வட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

அராலி, வட்டுக்கோட்டை. [16859]

தகவல்: J. S. M. சாமுவேல், லங்கா இசெந்த லிமிட்டட்

## திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்

திருமதி சின்னம்மா கட்டுடை மானிப்பாய் மேற்கில் 18-5-91இல் காலமானார். இவர் நவாலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி மயில்வாகனம், கணேசராசா [சுங்க இலாகா, கொழும்பு], குலசேகரம் [ஆசியன் வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்], திருஞானசம்பந்தர், மகேஸ்வரி மகாலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மயில்வாகனம், அற்புதமலர், இராசமலர் [யாழ். போதனா வைத்தியசாலை], தவமணி, மகாலிங்கம் [அஸ்பெஸ்டோஸ் சீமெந்து இன்டஸ்ரீஸ்] ஆகியோரின் மாமியாரும், மங்கயேஸ்வரி, சிவனேஸ்வரி, பரமேஸ்வரி [யாழ். போதனா வைத்தியசாலை], விக்னேஸ்வரராசா, சிறீதரன் [சவுதிஅரேபியா], முருகானந்தன் [ஜேர்மனி], சத்தியவாணி மதிபழகன், சுபாதினி, மலர்விழி, மனோகரன் ஆகியோரின் பேத்தியும், தமிழினி, தமிழ்மாறன், தமிழீசன், அருள்வதனி, மதிவதனி, கலைவாணி, புருஷோத்தமன், வைகுந்தன், பார்த்திபன், அஜயந்தன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-5-91 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : க. திருஞானசம்பந்தர்

மானிப்பாய் மேற்கு. [16732]

## ராணி அழகரட்ணம்

கரவெட்டியைச் சேர்ந்த ராணி அழகரட்ணம் அமெரிக்காவில் காலமானார். இவர் அழகரட்ணம் கிரனிஸ்லாசின் அன்பு மனைவியும், இரஞ்சினி [கனடா], சிறீதரன் [அமெரிக்கா] ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சேம்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற மணிவாம்பிள்ளையினதும், யோசெவ், அந்தோனிமுத்து, இரைராஜா, குணரட்ணம் [அமெரிக்கா] ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோராஜ் [கனடா] இன் அருமை மாமியாரும் ஆவார். இறுதிச் சடங்கு அமெரிக்காவில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்: S. யோகசுவ்

43, இராஜசிங்கம் வீதி, வெள்ளவத்தை. [4083]

## நடராசா காந்தவேள்

சுழிபுரத்தைச் சேர்ந்த காந்தவேள் 18-5-91 இல் காலமானார்.

இவர் கதிரவேலு நடராசா [ஆசிரிய ஆலோசகர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி], இரதி நடராசா [ஆசிரியை, சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்] ஆகியோரின் அருமைப் புத்திரனும், காந்தரூபன், காந்தகுமாரன், காலஞ்சென்ற நவனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளைப்பாறிய அதிபர் க. நல்லதம்பியின் பேரனுமாவார். இறுதிக் கிரிகைகள் இன்று [19-5-91] காலை 11 மணியளவில் நடைபெறும்.

தகவல்: க. நடராசா [தகப்பன்]

நவினிகாந், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். [16734]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361 இல் அமைந்துள்ள அச்சகத்தில் 19-05-1991 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 19

யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை மாலை 4 மணிக்கு விடுதலைப் புலிகளின் துணைப் படையில் பயிற்சி பெற்றோருக்கும் விடுதலைப் புலிகளின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிந்த ஆண்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் பிரிவில் உள்ள துணைப் படையினரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி புரிந்தோரும் [ஆண் உறுப்பினர்கள்] இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கண்ணியில் கவச வாகனம் சேதம்

அம்பாறை. சாகாமத்தில் விடுதலைப் புலிகள் புதைத்து வைத்திருந்த நிலக்கண்ணியில் இராணுவத்தினரின் கவசவாகனம் சிக்கிச் சேதமடைந்தது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

கண்ணிவெடிச் சம்பவத்தில் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை [ஒ]

## அரசாங்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கே. தமக்கிடையில் கூட்டணி ஒன்று உருவாக வேண்டியதன் அவசியத்தை அவை உணர்வதாகவும் —

அதன் பொருட்டு அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்க தீவிர முயற்சிகள் நடப்பதாகவும் அறியவருகிறது

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் இந்தக் கூட்டணியை அமைப்பதற்கு முக்கிய பிரமுகர்கள் இரகசியப் பேச்சுக்களில் இப்போது ஈடுபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது [அ]

## தமிழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றும் அறியவருகின்றது

சூறையாடப்படும் பெறுமதி மிக்க பொருள்கள் இராணுவ அதிகாரிகளின் வீடுகளுக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

ரோந்து செல்லும் இராணுவத்தினரின் உதவியுடன், தமிழ்க் குழு ஒன்று வீடுகளில் புகுந்து நகை, பணம் போன்றவற்றைக் கொள்ளையடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## வவுனியாப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாதமாக உள்ளது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி மக்கள் இந்த பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்த வேளை, கால்நடைகள் கவனிப்பாரற்ற நிலையில் வயல்களில் சென்று மேய்ந்ததால் நெல் வயல்கள் பாழடைந்துள்ளன.

அதனால் அறுவடை செய்வதற்கு நெல் எதுவும் மிஞ்சாத நிலையில் விவசாயிகள் அவற்றைக் கைவிட்டுள்ளனர். [ஆ-76]

## மருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேரும் என நம்பப்படுகிறது.

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் விடாமுயற்சியாலும், செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவுடன் இச் சங்கத்தினர் பல தடவைகள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாகவும் [illegible] [ஆ-15]

## பரீட்சை 23 இல் ஆரம்பம்

கொழும்பு, மே 19

இடைநிறுத்தம் செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சை இம் மாதம் 23 ஆம் திகதி வியாழன் ஆரம்பமாகி ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்று நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பொது விடுமுறை தினங்களான மே 26, 27, 28 மற்றும் ஜூன் 2 ஆகிய திகதிகளில் இப் பரீட்சை நடத்தப்படமாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் ஆர். தர் வெதமுல்ல நேற்றுத் தெரிவித்தார். [ஒ-எ]

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 16 — 3 — 1913

உதிர்வு: 20 — 4 — 1991

### திருமதி கார்த்திகேசு நாகம்மா

அமரர் கார்த்திகேசு நாகம்மாவின் வீட்டுக்கிருத்தியக் கிரிகைகள் நாளை 20-5-91 [திங்கட்கிழமை] நடைபெற உள்ளன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத் தருவதுடன் அவற்றில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் நேரில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உரிய உதவிகள் செய்தோருக்கும் எமது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

—குடும்பத்தினர்

நா. ஜெயரஞ்சிதன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. [இ/5067]

## 1 ஆம் வருட நினைவு





### திரு. B. S. நிக்கலஸ்

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

தோற்றம்:- 28-07-1908

மறைவு:- 19-05-1990

### திருமதி பேரிறோசம்மா நிக்கலஸ்

[இளைப்பாறிய ஆசிரியை]

தோற்றம்:- 17 07 1919

மறைவு:- 17-01-1990

"சீவியத்தில் எங்களை நேசித்தவர்களே மரணத்திலும் எங்களை மறவாதீர்கள்"

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 20-05-91 திங்கட்கிழமை காலை மிருசுவில் புனித நிக்கலஸ் ஆலயத்திலும், யாழ். புனித மரியன்னை பேராலயம், அருள் ஆச்சிரமம், புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்திலும் இரத்தப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பலியில் பங்குபற்றி செபிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திரு ஜெயசிங், மிருசுவில். [16857]

பிரிவால் துயருறும், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், சகோதரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org